கமிஷனர் நிறுத்திவைத்துள்ளார். இது இப்போது சென்னையிலுள்ள இந்து சமய அறக்கட்டளைகள் கமிஷனரின் முன் முடிவு பெறுமலிருக்கிறது.

டாக்டர் எச். வி. ஹாண்டே: அழகர்கோயில், கள்ளழகர் தேவஸ்தான அறங்காவலர் தலைவர் தேர்தல் முறைப்படி நடக்கவில்லை என்று சொன்னார்கள். அதனுடைய விவரம் அமைச்சர் அவர்கள் சொல்ல முடியுமா? இதற்கான மறுதேர்தல் எப்பொழுது நடைபெறும் என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, 29—3—1967-அன்று தருமகர்த்தாவைத் தேர்ந்தெடுப்பதற்காக அறங்காவலர் மன்றம் கூட்டப்பட்டது. மற்ற தருமகர்த்தாக்களுக்கு ஒரு வார காலத்திற்கு முன்பாகவே கூட்டம் பற்றி அறிவிப்பு செய்யவேண்டும் என்பது முறை. அதன்படி யாருக்குமே அறிவிப்பு செய்யாமல் கூட்டம் நடைபெற்றிருக்கிறது. தர்மகர்த்தாக் குழுவினைச் சேர்ந்த ஒருவர், தங்களுக்கு அறிவிக்கப்படவில்லை, நோடீஸ் கொடுக்கப்படவில்லை, பத்திரிகையிலிருந்து முடிவைத் தெரிந்து கொள்ளவேண்டியிருந்தது என்று விண்ணப்பித்துக்கொண்டார். அதுபற்றி ஆராயப்பட்டு, முறைப்படி தேர்தல் நடக்கவில்லை என்ற காரணத்தால் நிறுத்தி வைக்கப்பட்டது.

Teachers of Valliyoor Panchayat Union

* 216 Q.—THIRU M. S. SIVASAMI: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state:

(*a*) whether it is a fact that the teachers of Valliyoor Panchayat Union have not been paid their salary from 21st January to 20th February 1967; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) 31—3—1967 தேதியோடு முடிவடையும் கால அளவிற்குரிய சிறப்பு அகவிலைப்படி மானியம் சாதாரணமாய் 1967 மே திங்களில்தான் வழங்கப்படும். ஆனால், தனிப்பட்ட முறையில் முன் கூட்டியே இதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டு. ஆசிரியர்களின் சம்பளங்களும் இப்போது கொடுக்கப்பட்டுவிட்டன. மு.ப. 10–00

திரு. மு.ச. சிவசாமி: மாதம் முடிந்தவுடன், ஒவ்வொரு ஆசிரியர்களுக்கும் சம்பளம் பட்டுவாடா செய்யாத எல்லா பஞ்சாயத்து யூனியன்களுக்கும் அரசாங்கம் கடுமையான உத்திரவிடுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: ஏறத்தாழ முதல் தேதியன்றே அந்தச் சம்பளங்கள் ஆசிரியர்களுக்கு வழங்கப்படவேண்டுமென்று உத்திரவை ஏற்கெனவே அரசு அனுப்பியிருக்

இறது. அப்படி ஏதாவது பஞ்சாயத்து யூனியன் 1-ம் தேதியன்றே சம்பளம் பட்டுவாடா செய்ய முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை யென்றால், அதுபற்றி தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. நா. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, நிதி பற்றுக்குறையாக உள்ள பஞ்சாயத்து யூனியன்களுக்கு முன் கூட்டியே கல்வி மானியத்தை அளிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : வள்ளியூர் பஞ்சாயத்தைப் பொறுத்தவரையில் அந்த வகையில் சம்பளம் அளிக்கப்பட்டது. எல்லா பஞ்சாயத்துக்களுக்கும் அளிக்க மேற்கொண்டு நிலைமை ஆராயப்பட்டு தக்க முடிவை அரசாங்கம் எடுத்துக் கொள்ளும்.

குடியாத்தம்–பரதராமி சாலை

***217. வினு.—திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

குடியாத்தத்திலிருந்து பரதராமிக்குப் போகும் ரோட்டில் ஐந்து இடங்களில் காட்டாறுகள் உள்ளதால் மேற்படி இடங்களில் பாலங்கள் கட்டும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அவ்விதமான செயற் குறிப்பு ஒன்றும் இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இந்த ஐந்து இடங்களும் மலைப்பிரதேசத்தில் இருப்பதால் மழைக்காலத்தில் தண்ணீர் போகக் கூடிய ஓடைகள் இருக்கின்றன. ஆகவே, வருடாவருடம் ஆடு, மாடுகளும், வண்டிகளும் இந்த வெள்ளத்தினால் அடித்துக் கொண்டு போகப்படுகின்றன என்பது அமைச்சர்களுக்குத் தெரியுமா? குறிப்பாக, ஒரு மாதத்திற்கு முன்னாலே ஒரு லாரியே கவிழ்ந்து போய்விட்டது. ஆகவே, தயவு செய்து சிறிய பாலங்களைக் கட்ட அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதுபற்றி பலமுறை எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறதென்றாலும், நிதிநிலை வசதி குறித்து நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்க்க முடியாத நிலையில் இருக்கிறது. ஐந்து அல்லது ஏழு இடங்களில் பாலங்கள் கட்டப்படவேண்டும். அதற்காக 3 லட்சம் ரூபாயிலிருந்து 4 லட்சம் ரூபாய் வரை செலவாகும் என்று கணக்கிடப்பட்டு, திட்டத்தில் சேர்ப்பதா, அல்லது தனியாக எடுத்துக்கொள்ளப் படுவதா என்பதை யோசிக்கும் நிலையில் தற்போது இல்லை.